UNIVERSITÄTS-
**KINDERSPITAL
ZÜRICH**

பெற்றோர்க்கான
அறிவித்தல்கள்

# தொற்றுக் காய்ச்சலைத் தவிர்த்தல

உங்கள் பிள்ளையை மற்றும் வேறு நோயாளர்களை நோய் தொற்றுவதற்கு முன்பாக இவ்வாறு நீங்கள் பாதுகாருங்கள்.



நோயாளரின் அறைக்குள் நீங்கள் உட்செல்ல முன்பும் வெளியேறிய பின்பும் கைகளை நன்றாக தண்ணீராலும் சவர்க்காரத்தாலும் கழுவுங்கள்.



உங்களுக்கு இருமல் தடிமல் ஏற்பட்டிருப்பின், பராமரிக்கும் தாதிகளிடம் அதுகுறித்து அறிவித்துக் கொள்ளுங்கள்.



இருமல் தடிமல் ஏற்பட்டிருப்பின், நோயாளர் அறைக்குள் இருக்கும்போது நீங்கள் வாய்- கவசத்தை அணிந்து கொள்ளுங்கள்.



காய்ச்சல் அல்லது தொற்றுநோய் அறிகுறி இருப்பின் வீட்டில் இருந்து கொள்ளுங்கள்.



பருவகாலத்தில் ஏற்படும் தொற்றுக் காய்ச்சலுக்கு எதிராக ஒரு தடுப்பூசி உள்ளது. இது விசேடமாக தொற்றுக் காய்ச்சல் ஏற்படும் ஆபத்துள்ள நபர்களுக்கு* மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு பரிந்துரை செய்யப்படுகின்றது. உங்கள் ஆண்.˙.பெண் குடும்ப வைத்தியரிமோ அல்லது பிள்ளைகள் வைத்தியசாலையில் உங்கள் பிள்ளையைப் பராமரிக்கும் ஆண்.˙.பெண் வைத்தியர்களிடமோ இது குறித்து அறிந்து கொள்ளுங்கள்.

* தமது நோய் காரணமாக, கடினமான தொற்றுக் காய்ச்சலால் பின்விளைவுகளை எதிர்நோக்கும் நபர்களுக்கு

*Das Spital der
Eleonorenstiftung*